| சாட்சி : DW1<br>ராஜேஸ்வரி, க/பெ செல்வம் | அ.வ.எண்.253/2019 | 28.01.2026 |
|---|---|---|

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. 1999ம் வருடம் வாதியின் பெயருக்கு நான் கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்தேனா என்றால் எழுதிக் கொடுத்தேன். மேற்படி ஆவணம் இலால்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி ஆவண எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. சார்பதிவாளர் மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள தொகையை பெற்றுக்கொண்டேனா என்றும், எனக்கு கிரையம் பொறுத்து சம்மதமா என்றும் கேட்டாரா என்றால் கேட்டார். மேற்படி கிரைய ஆவணத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 3 மாதத்தில் வாதி கிரைய தொகையை கொடுத்துவிடுவதாக சொன்னதால் நம்பிக்கையின் அடிப்படையில் மேற்படி கையொப்பத்தை செய்து கொடுத்தேன்.

2) வாதிக்கு நான் 10 சென்டு நிலத்தை கிரையம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் ரூ.11 ஆயிரம் கிரைய தொகையை நான் பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி சரத்து தவறானதாகும். நான் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த இடத்தின் நான்கெல்லை சொல்ல முடியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. அகிலாம்பாள் மற்றும் பத்மாவதியம்மாள் ஆகியோர்கள் 27-1/2 சென்ட் நிலத்தை எனக்கு பவர் ஆவணம் எழுதி கொடுத்தார்கள். நான் வாதிக்கு கிரையம் செய்துகொடுத்த 10-1/2 சென்ட் மேற்படி 27-1/2 சென்டிற்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

3) வழக்கு சொத்திற்கு வடபுறம் எனக்கு வீடு உள்ளது. வழக்கு சொத்திற்கு 7 அடி தள்ளி எனது வீடு உள்ளது. வழக்கு சொத்தில் ஒரு மீன் தொட்டி உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி தொட்டியை நான் கட்டி 5 வருடம் இருக்கும். எனக்கும், வாதிக்கும் இடையில் இந்நீதிமன்றத்தில் இதற்கு முன்பாக நடந்த வழக்கு முடிந்த பின்னர் மீன் தொட்டியை கட்டினேனா என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் தோப்பிற்குள் நுழையக்கூடாது என தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து நான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன். வாதியும், வாதியின் கணவரும் தாவா சொத்திற்கு மேற்படி வழக்கு முடிந்த பின்னர் வந்தார்களா என்றால் இல்லை.

4) வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வந்ததற்கு பின்னிட்டு நான் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்வதாக வாதி எனக்கு எதிராக சமயபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றாலும், அதற்கு வா.சா.ஆ.5 ஆக மனு ரசீது வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் கிரையம் செய்த அன்று வாதி எனக்கு கிரைய தொகையை கொடுக்காமல் இருந்திருந்தால் கிரையத்திற்கு முன்பாகவே அது தொடர்பாக நான் வாதியுடன் ஆவணம் எதுவும் ஏற்படுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்னால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 1999 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணத்திற்கு வாதி கிரைய தொகையை எனக்கு கொடுக்காததால் 2000 ம் ஆண்டு மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்து ஆவணம் பதிவு செய்யப்பட்டது.

5) என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 02.02.1999 ம் ஆண்டு நான்

வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றாலும், பி.வா.சா.ஆ.1 க்குரிய பத்திரமானது 04.02.1999ம் தேதி தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக மறு பயன் பெற்றுக்கொண்டு வாதியின் பெயருக்கு கிரையத்தை ஏற்படுத்திவிட்டு, பின்னிட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமாக எனது கணவருக்கு தான் தெரியும் என்றாலும், எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**
ராஜேஸ்வரி

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.